(අ) සමාලෝචිත වර්ෂයේදී පුනරාවර්තන වියදම්හි වැය විෂයයන් 10 ක ශුද්ධ ප්‍රතිපාදනයෙන් සියයට 8 සිට සියයට 81 ක් දක්වා වූ පරාසයක ප්‍රතිපාදන ඉතිරිවීමක් විය.

(ආ) සමාලෝචිත වර්ෂයේදී පුනරාවර්තන වැය විෂයයන් 07 ක මූලික ඇස්තමේන්තු හා සංශෝධිත වියදම් ඇස්තමේන්තු අතර සියයට 22 සිට සියයට 37 ක් දක්වා වූ පරාසයක විචලතාවයක් විය.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

5

ඒ අනුව මූලික ඇස්තමේන්තු සකස් කිරීමේදී පසුගිය වර්ෂයන්හි වියදම් පිළිබඳ සමාලෝචනයක් සිදු කර හැකිතාක් නිවැරදිව වියදම් ඇස්තමේන්තු පුරෝකථනය කිරීමේ අවශ්‍යතාවය විගණනයේදී අවධාරණය කෙරේ.

**(ඇ) ඉතිරිවීම් සඳහා ඉදිරිපත් කළ හේතු ප්‍රමාණවත් නොවීම**

වෙන්කරන ලද අධි ප්‍රතිපාදන සහිත වැය විෂයයන් 05 න් මු.රෙ 66/69 අනුව මාරුකිරීම් සිදු කළ පසුව ද, සමාලෝචිත වර්ෂය අවසාන දිනට තවදුරටත් වූ ඉතිරිවීම් සඳහා හේතු වශයෙන් "වියදම් සීමා කිරීමට කටයුතු කළබව " සඳහන් කර තිබුණි.

**2.2.2 මූලධන වියදම්**

(අ) සමාලෝචිත වර්ෂය සඳහා වූ මූලධන වැය විෂයයන් දෙකක මූලික ඇස්තමේන්තු හා සංශෝධිත ඇස්තමේන්තු අතර විචලතාවය සියයට 86 ක් සහ සියයට 363 ක් බැගින් විය. ඒ අනුව මූලික ඇස්තමේන්තු සකස් කිරීමේදී හැකිතාක් නිවැරදිව වියදම් පුරෝකථනය කිරීමට කටයුතු කර නොතිබුණි.

(ආ) සමාලෝචිත වර්ෂය සඳහා වූ මූලධන වැය විෂයයන් 05 ක ශුද්ධ ප්‍රතිපාදනයෙන් සියයට 14 සිට සියයට 63 ක් දක්වා වූ පරාසයක ප්‍රතිපාදන ඉතිරිවීමක් විය.

**2.2.3 අත්තිකාරම් ගිණුම්**

සේවය හැර ගිය නිලධාරීන්ගෙන් අයවිය යුතු වර්ෂ 01 සිට 03 දක්වා පැරණි ණය ශේෂය රු.223,269 ක් ද, අවුරුදු 1ට අඩු රු.470,177 ක ණය ශේෂයක් ද විය. තවද, වැඩ තහනම් කළ නිලධාරීන්ගේ ණය ශේෂ ලෙස වර්ෂ 05 ට වඩා පැරණි රු.335,753 ක ශේෂයක් ද, වර්ෂ 01 සිට 03 දක්වා පැරණි රු 238,000 ක ණය ශේෂයක් ද විය. ඒ අනුව ආයතන සංග්‍රහයේ XXIV 4:5 උප වගන්තිය අනුව එම ණය අයකර ගැනීමට කටයුතු කර නොතිබුණි. වැඩ තහනම් කළ වසර 05 ට වඩා පැරණි අයවිය යුතු රු. 335,753 ක ශේෂය ගිණුමේ "වෙනත් ණය ශේෂයක්" ලෙස සඳහන් කර තිබුණි.

**2.3 නීති, රීති හා රෙගුලාසිවලට අනුකූල නොවීම**

| **නීති,රීති හා රෙගුලාසි වලට යොමුව** | **අනුකූල නොවීම** |
|---|---|
| (අ) ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ මුදල් රෙගුලාසි සංග්‍රහය | |
| මු.රෙ 155 | යොමුගත වගන්තිය ප්‍රකාරව විගණන විමසුම් සඳහා අප්‍රමාදව ක්‍රියාකොට ඒවාට සම්පූර්ණ |

| | |
|---|---|
| | පිළිතුරු සැපයීම ගණන්දීමේ නිලධාරීන්ගේ වගකීම වුවද විමසුම් සඳහා පිළිතුරු සැපයීම මාස 3 කට වඩා ප්‍රමාද වූ අවස්ථා විය. |
| (ආ) 2022 අප්‍රේල් 04 දිනැති අංක 5/2022 දරන මුදල් අමාත්‍යාංශ චක්‍රලේඛය | රජයේ දේපල අස්ථානගතවීම සහ අවභාවිතය වැළැක්වීම මෙන්ම ඒවා උපරිම ඵලදායීභාවයෙන් ප්‍රයෝජනයට ගැනීම තහවුරු කිරීමට ආයතන ප්‍රධානීන්ට නියම කර තිබියදී, එයට පටහැනිව රු.3,038,690 ක පිරිවැයක් සහිත N1SSAN SYLPHY වර්ගයේ මෝටර් රථය ආයතන අතර විධිමත් වත්කම් හුවමාරුවක් සිදු නොකර 2022 දෙසැම්බර් 05 දින ජනාධිපති ලේකම් කාර්යාලය වෙත භාර දී තිබුණි. |

## 3 මෙහෙයුම් සමාලෝචනය

### 3.1 කාර්යසාධනය

#### 3.1.1 දැක්ම හා මෙහෙවර

1969 ජනවාරි 16 දිනැති අංක 01 දරන ආනයන හා අපනයන (පාලන) පනතින් පිහිටුවන ලද දෙපාර්තමේන්තුවේ අරමුණ, දැක්ම හා මෙහෙවර අනුව ශ්‍රී ලංකාවේ ආර්ථිකයට අහිතකර ලෙස බලපාන ආනයනයන් හා අපනයනයන් පාලනය කිරීමට අවශ්‍ය කටයුතු සිදු කළ යුතු වුවත් එක් එක් විෂයයන්ට අදාලව රජයේ ආයතන විසින් නිකුත් කරනු ලබන නිර්දේශ මත පදනම්ව පමණක් ආනයන බලපත්‍ර නිකුත් කිරීමට කටයුතු කර තිබුණි. තවද, දෙපාර්තමේන්තුව පිහිටුවීමේ මූලික අරමුණු ඉටුවන ආකාරයට කටයුතු කිරීම සඳහා පිළිගත් විද්‍යාත්මක ක්‍රමවේදයක් හෝ ක්‍රියාපටිපාටියක් සකස් කර නොතිබුණු අතර බලපත්‍ර ගාස්තු අයකිරීම ප්‍රධාන කාර්යය ලෙස සළකා කටයුතු කරමින් රටෙහි සමස්ථ පාරිභෝජනයෙහි පුරෝකථනයන් සිදු කර ප්‍රමාණ පාලනය (Quantity Control) නොකරන බව නිරීක්ෂණය විය.

#### 3.1.2 දෙපාර්තමේන්තුවේ වගකීම් හා කාර්ය භාරය

අපනයන පාලනයට අදාළ රෙගුලාසි ඇතුළත් ගැසට් නිවේදන ප්‍රකාශයට පත් කිරීම සහ එකී රෙගුලාසි වලට යටත්ව මෙරට ආර්ථිකයේ යහපත උදෙසා බලපත්‍ර නිකුත් කිරීම ද දෙපාර්තමේන්තුවේ වගකීම් සහ කාර්ය භාරයන් වශයෙන් දැක්වුවද, දෙපාර්තමේන්තුව ආනයන

පාලනයට අදාළ කාර්යයන්හි පමණක් නිරතවී තිබුණු අතර 2017 වසරෙන් පසුව අපනයනයන්ට අදාළ කිසිදු රෙගුලාසියක් නිකුත් කළ බවට සාක්ෂි විගණනයට නිරික්ෂණය නොවුණි.

**4 යහපාලනය**

**4.1 රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභා නියෝග ක්‍රියාත්මක කිරීම**

(අ) ඵලදායී තොරතුරු තාක්ෂණික පද්ධතීන් උපයෝගී කර ගනිමින් රජයේ ආදායම එකතු කිරීම, වැඩිදියුණු කිරීම සඳහා පාර්ශවකරුවන් විසින් සහ පාර්ශවකරුවන් අතර ගත යුතු පියවර නිර්දේශ කිරීම සඳහා වූ 2016 නොවැම්බර් මස 23 වැනි දින පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කරන ලද රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාවේ අතුරු වාර්තාවේ නියෝග පරිදි "ආයතන විසි අටක සම්බන්ධීකරණය ඇතිව, බලපත්‍ර නිකුත් කිරීමේදී අදාල ආයතන වෙතින් අන්තර්ජාලය ඔස්සේ නිර්දේශ ලිපි ලබා ගැනීමට සැලසුම් සකස් කළ යුතු බව" දන්වා තිබුණද එම නිර්දේශය විගණන දිනය වූ 2024 මාර්තු 31 දින වන විටත් ක්‍රියාත්මක වී නොතිබුණි.

(ආ) නිර්දේශිත කාලය ඉක්ම වූ වාහන සහ කොටස්කර ගෙන්වනු ලබන වාහන ආනයනය සඳහා ප්‍රතිපත්තියක් සකස් කරන ලෙස 2024 ජනවාරි 23 දින පැවති රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් නියෝග කර තිබුණ ද, එවැනි ප්‍රතිපත්තියක් සකස්කර නොතිබුණු අතර ඖෂධ නිෂ්පාදනයට ගෙන්වන ස්ප්‍රිතු පිළිබඳ පසු විපරම් කරන ලෙස දැනුම් දී තිබුණ ද, එය ද ඉටුකර නොතිබුණි.

(ඇ) සි ෂෙල්ස් සිට තායිලන්තය දක්වා ගමන් කළ මත්ස්‍යයින් ගබඩා කළ බහාළුම් රැගත් නෞකාවක් කොළඹ වරායට ආසන්න මුහුදු ප්‍රදේශයේ දී කාර්මික දෝෂයකට ලක් වී විදුලි සැපයුම නතර වීම හේතුවෙන් ශ්‍රී ලංකාවේ වරාය අධිකාරිය වෙත ළඟා වී තිබුණු අතර විදේශීය නෞකාවේ දේශීය නියෝජිතයා මගින් සොයාගත් දේශීය පෞද්ගලික ආයතනයකට කාබනික පොහොර නිෂ්පාදනය සඳහා මෙම මාළු බහාළුම් 2022 මාර්තු 09 වන දින විකුණා තිබීම පිළිබඳව 2024 ජනවාරි 23 දින පැවති රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් ලබා දී තිබුණු පහත සඳහන් නියෝගයන් 2024 මාර්තු 20 දින වන විටත් දෙපාර්තමේන්තුව විසින් ඉටුකර නොතිබුණි.

ඉවතලන මාළු කොටස් යොදාගෙන පොහොර නිෂ්පාදනය කිරීම සිදුකරනු ලබන අදාළ ආයතනය විසින් මේ වන විට කොපමණ ප්‍රමාණයක පොහොර නිෂ්පාදනය කර තිබේද යන්න පිළිබඳ ක්ෂේත්‍ර පරික්ෂණයක් සිදුකිරීම.

කාබනික පොහොර නිෂ්පාදනය සඳහා යොදා නොගත් අප-මාළු (Fish-Waste) අඩංගු බහාලුම් 15 පිළිබඳව සොයා බලා අපහරණය සඳහා නිසි ක්‍රියාමාර්ග ගැනීම.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

8

5 මානව සම්පත් කළමනාකරණය

5.1 අනුයුක්ත කාර්ය මණ්ඩලය හා තත්‍ය කාර්ය මණ්ඩලය

2023 දෙසැම්බර් 31 දිනට අනුමත, තත්‍ය සහ පුරප්පාඩු කාර්යය මණ්ඩලය පිළිබඳ විස්තර පහත දැක්වේ.

| සේවක වර්ගය | අනුමත සංඛ්‍යාව | තථ්‍ය සංඛ්‍යාව | පුරප්පාඩු සංඛ්‍යාව |
|---|---|---|---|
| ජ්‍යෙෂ්ඨ මට්ටම | 14 | 11 | 3 |
| තෘතියික මට්ටම | 4 | 4 | - |
| ද්විතික මට්ටම | 84 | 75 | 9 |
| ප්‍රාථමික මට්ටම | 20 | 15 | 5 |
| එකතුව | 122 | 105 | 17 |

දෙපාර්තමේන්තුවේ 2023 දෙසැම්බර් 31 දිනට අනුමත කාර්යය මණ්ඩලය 122 වන නමුත් තත්‍ය කාර්යය මණ්ඩලය 105 ක් ව පැවති අතර එදිනට නියෝජ්‍ය/සහකාර පාලක තනතුරට අදාලව පුරප්පාඩු 02ක් සහ නීති නිලධාරි තනතුරට අදාලව පුරප්පාඩුවක් පැවති අතර ද්විතියික මට්ටමේ නිලධාරින් 09 ක් සහ ප්‍රාථමික මට්ටමේ නිලධාරි 05 ක් සඳහා ද පුරප්පාඩු පැවතුණි.

ඊ.එම්.කේ.එම් පද්මලාල්

ජ්‍යෙෂ්ඨ සහකාර විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට,

ඊ.එම්.කේ.එම්. පද්මලාල්
ජ්‍යෙෂ්ඨ සහකාර විගණකාධිපති
ජාතික විගණන කාර්යාලය

## 4 அத்தியாயம் - செயற்திறன் குறியீடு

### 4.1 நிறுவன செயற்திறன் குறியீடு (செயற்திட்டத்தின் அடிப்படையில்)

| செயற்திறன் குறியீடு | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | | |
|---|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50% - 74% | 49% - 0% |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் வழங்கல் மற்றும் பற்று வைத்தல் | √ | | | |
| வர்த்தமானி அறிவித்தல்கள் | √ | | | |
| வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைகளை தொகுத்து வழங்கல் | √ | | | |
| பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடை முறைப்படுத்தல். | | √ | | |

## 5 அத்தியாயம் - நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை

2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டில் உலக அரச தலைவர்களினால் உலகலவிய ரீதியில் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ள வேண்டிய நிலையான அபிவிருத்தியின் 17 நோக்கங்கள் மற்றும் 169 இலக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. நிலையான அபிவிருத்திக்காக 2030 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சிநிரலில் மனிதன், பூமி மற்றும் சுபீட்சத்திற்கான செயலாற்றுகைத் திட்டம், பரந்த சுதந்திரத்திற்குள் உலகலாவிய சமாதானத்தினை வலுவூட்டுவதற்கான முயற்சி, தீவிர வறுமை, வறுமையின் வடிவங்களை நீக்குதல், மனித உரிமைகள், ஆண் பெண் சமனான தன்மை மற்றும் மகளிர், சிறுமிகள் போன்றவர்களை வலுவூட்டல் என்பவற்றை இலக்காகக் கொள்ளல் மற்றும் அனைத்து தரப்பினர்களையும் பங்குபற்றிக் கொண்டு செயற்படும் தன்மை இதில் அடங்கும்.

உலகலாவிய நிலையான அபிவிருத்திக்கான பிரவேசமாக இலங்கையின் அரச நிறுவனங்கள் அதனைத் தழுவிக் கொண்டு மற்றும் நீண்டகால அபிவிருத்திக்கான மூலோபாயத்தினை செயற்படுத்துவதற்குத் தேவையான நிலையான அபிவிருத்திச் சபையின் அனுசரணையில் நடாத்தப்பட்ட செயலமர்வுகளுக்காக எமது திணைக்களம் பங்குபற்றலை வழங்கியது. அதன் பிரகாரம் திணைக்களத்தின் நோக்கம் மற்றும் செயற்பணி மற்றும் பணிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு திணைக்கத்திற்கு உரிய உலகலாவிய நிலையான அபிவிருத்தியின் நோக்கம் மற்றும் இலக்கு இனங்காணப்பட்டது. பின்னர் திணைக்களத்தின் அபிலாசைகள் உச்சமடைவதன் படி நீண்டகால நோக்குடன் கூடிய நிலையான அபிவிருத்திக்கான நோக்கு மற்றும் அதன் முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்காக ஒழுங்குபடுத்தல்கள் நிறுவப்பட்டன. ஒழுங்குபடுத்திக் கொள்ளப்பட்ட நோக்கங்களின் மூலம் நாட்டின் நிலையான அபிவிருத்திக்கான உரிய தேவைப்பாட்டினை வழங்குவதனை முன்னிட்டு எமது திணைக்களச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்துள்ளது. திணைக்களத்திற்கு உரிய நோக்கங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் போது அடிப்படையாகக் கொள்கின்ற நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்கள் கீழ் வருமாறாகும்.

### 5.1 இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள்

**நகர மற்றும் குடியேற்றங்களை முழுமையாக, பாதுகாப்பான, உறுதிமிக்கதாக, நிலையானதாக நிர்மானித்தல். (நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்கம் 11)**

வாழ்வதற்கு உகந்த சூழலொன்றை நாட்டில் உருவாக்குவதற்கு காற்றின் தரத்தினை உறுதிப்படுத்துதல் மற்றும் நகர மற்றும் ஏனைய கழிவுகளை முகாமைப்படுத்துதல் வேண்டும். நகரமயமாக்கல் இடம்பெற்ற பிரதேசங்களில் மோட்டார் வாகனப் பயன்பாடு வேகமாக அதிகரித்ததன் காரணமாக அப் பிரதேசங்களில் காற்றில் வெளியேற்ற வாயுக்களின் வீதமும் அதிகரித்துள்ளதைக் காண முடிகின்றது. இங்கு வாகனங்களிலிருந்து வெளியேறும் நச்சுப் புகையினால் அதிகளவான காற்று மாசடைதல் இடம்பெறுவது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். அதனால் வாயு வெளியேற்றத் தரத்திற்கு இணங்காத வாகனங்களை இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. அதற்காக 2019.01.25 ஆம் திகதி 2107/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

**நிலையான பயன்பாடு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்தல். (நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்கம் 12)**

சுற்றுச் சூழலுக்கு இசைவான இரசாயனப் பொருட்கள் மற்றும் அனைத்து கழிவுகளும் முகாமைத்துவம் செய்யப்படுவதனால் மனித சுகாதார மற்றும் சூழலுக்கு ஏற்படும் தீமைகளின் தாக்கத்தைக் குறைப்பதனால் அரசு எதிர்பார்க்கின்ற அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு இத் திணைக்களம் ஒழுங்கமைப்பு நிறுவனமொன்றாக கடமை புரிகின்றது. அவ்வாறு தாக்கம் செலுத்தும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களை கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்த மற்றும் ஒழுங்குபடுத்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை முழுமையாகத் தடை செய்தல் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு உரிய தரத்தினை நிர்ணயம் செய்தல், ஏனைய அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்டு வருகின்றது. அதன்படி, 2326/41 ஆம் இலக்க மற்றும் 2023.04.06 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படுகின்ற பிளாஸ்டிக் பொருட்களை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, சுற்றாடல் அமைச்சினால் 2023 சனவரி மாதம் 31 ஆம் திகதிய 23/0265/622/003 ஆம் இலக்க "ஒரு முறை பயன்படுத்தப்படுகின்ற பிளாஸ்டிக் / பொலித்தீன் கழிவுகளைக் கட்டுப்படுத்தல்" என் தலைப்பிலான அவர்களின் அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டதோடு, 2023 யூன் மாதம் 01 ஆம் திகதியிலிருந்த நடைமுறைப்படுத்தும் வகையில், ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் உறிஞ்சி குழாய்கள் மற்றும் கலக்கல் உபகரணங்கள், பிளாஸ்டிக்கினாலான ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய தட்டுக்கள், கோப்பைகள் (யோகட் கோப்பை தவிர்ந்த), யோகட் கரண்டிகள் உள்ளிட்ட கரண்டிகள், முட்கரண்டிகள் மற்றும் கத்திகள், பிளாஸ்டிக் மலர் மாலைகள், பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுக்கள் இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

**நிலையான அபிவிருத்திக்காக அமைதியான மற்றும் பூரணமான சமூகமொன்றினை உருவாக்கல், நீதிக்காக அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கல் மற்றும் எல்லா மட்டங்களுக்கும் வினைத்திறனான, பொறுப்புடன் கூடிய முழுமையான நிறுவனம் ஒன்றினைக் கட்டியெழுப்புதல். (நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்கம் 16)**

அனைத்து நிலை அலுவலர்களினதும் பங்களிப்புடன் முடிவெடுக்கும் முறையையை நிறுவுவதும், அம் முடிவுகளை தொடர்ந்து மதிப்பீடு செய்வதனூடாக மிகுந்த வினைத்திறனை உறுதி செய்வதும் திணைக்களத்தின் இலக்காக உள்ளது. பணியாட்களின் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டங்களிலினூடாக அனைத்து நிலை அலுவல்களினதும் முடிவெடுக்கும் முறையை தொடர்ச்சியாக செய்வதன் மூலம் வினைத்திறனான பொறுப்பு கூறல் மற்றும் வெளிப்படையான நிறுவனமொன்றை கட்டியெழுப்ப முடியுமானது.

தேசிய நீதி முறைமைக்கு மற்றும் சர்வதேச பிரகடனங்கள், ஒப்பந்தங்களுக்கு அமைவாக மக்களுக்கு தகவல்களை அறிவதற்கு உள்ள உரிமையை பூரணமாக உறுதிப்படுத்தும் விதமாக திணைக்களத்தில் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. திணைக்களத்திடம் கோரப்படுகின்ற தகவல்களுக்கு மிகவும் பொறுப்புக் கூறுவதோடு மிக அவசரமாக கோரிக்கையாளர்களுக்கு அளிக்கப்படுவதோடு, திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாக புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### நிலையான அபிவிருத்திக்கான உலகளாவிய ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வலுப்படுத்தல் மற்றும் புத்துயிர்ப்படுத்தல் (நிலையான அபிவிருத்தி இலக்கு இலக்கம் 17)

அரசினால் எதிர்ப்பார்க்கப்படுகின்ற நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைய எடுக்கப்படுகின்ற கொள்கைகளை நடைமுறைப்படுத்தல், வசதிகளை அளித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இத் திணைக்களத்தின் பொறுப்பாகும். இதன் கீழ் அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் சரியான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்தல், சர்வதேச வர்த்தகத் தொடர்புகள் சம்பந்தமான ஒழுங்குவிதிகளை பலப்படுத்தல் என்பன திணைக்களத்தின் நோக்கங்களாகும். அதில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் 1540 ஆம் பிரகடனத்துடன் வர்த்தக வசதி வழங்கும் ஒப்பந்தத்தை (Trade Facilitation Agreement) இலங்கையில் நடைமுறைப்படுத்துவதனூடாக கொள்கை ஒருங்கிணைத்தல் மற்றும் நிலைப்படுத்தலின் மூலம் உலகளாவிய பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்தல் போன்ற நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைய முடியும். 1540 மும்மொழிவு தற்போது அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதேவேளை இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை நிகழ்நிலை முறையில் மிகவும் வினைத்திறனாக வழங்க ஐக்கிய அமெரிக்காவின் தூதரகத்துடன் தொடர்பான STRATLINK மின் கணனி முறைமை அமைப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு STRATLINK மின் கணனி முறைமையின் செயற்பாடு சம்பந்தமான ஆரம்ப கட்ட பயிற்சிகள் எஸ்தோனியா அரசின் பிரதிநிதிகளால் நடத்தப்பட்டது.

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| **11.** நகர மற்றும் குடியேற்றங்களை முழுமையாக, பாதுகாப்பான,உறுதி மிக்கதாக,நிலையானதாக நிர்மாணித்தல். | 11.6 2030 ஆகும் போது விஷேடமாக வாயுக்களின் தன்மையினை மற்றும் நகர மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் உட்பட நகரங்கள் மூலம் ஏற்படுகின்ற தனிநபர் சுற்றுச் சூழல் தாக்கத்தினைக் குறைத்தல். | 1.தரத்திற்கு இணங்க வாகன தயாரிப்புக்களுக்கு இடமளிக்காது இருத்தல். | | | ✓ |
| **12.** நிலையான பயன்பாடு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்தல். | 12.4 2020 ஆகும் போது இணக்கப்பாட்டிற்கு வந்துள்ள சர்வதேச வேலைத் திட்டங்களுக்கு இணங்கி சூழலை நேசிக்கக் கூடிய விதத்தில் இரசாயனப் பொருட்கள் மற்றும் அனைத்து கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதற்காக மானிட சுகாதார மற்றும் சூழலுக்கு நிகழ்கின்ற பாதகமான விளைவுகளை குறைப்பதற்காக காற்றிற்கு,நீரிற்கு மற்றும் மண்ணிற்கு | 2. பாசல் மாநாட்டின் மதிப்பாய்வினை நிறைவு செய்தல் | | | ✓ |
| | | 3.உரிய அதிகாரிகளின் சிபாரிசின் பிரகாரம் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை | | | ✓ |
| | | 4. ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் நடாத்தப்படுகின்ற ஆலோசணை கூட்டங்களின் எண்ணிக்கை | ✓ | | |
| | | 5. பதவி நிலை | | ✓ | |

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| | வளிவிடுவதனைக் குறைத்தல். | உத்தியோகத்தர்களுடன் நடாத்தப்படுகின்ற ஆலோசனை கூட்டங்களின் எண்ணிக்கை | | | |
| | | 6. விளிப்புணர்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் எண்ணிக்கை. | ✓ | | |
| | 12.5 2030 ஆகும் போது கழிவுப் பொருட்களின் பயன்பாட்டினை தடுத்தல்,குறைத்தல்,மீள் சுழற்சி செய்தல் மற்றும் அவற்றை மீள் பயன்படுத்துவதன் மூலம் குறைத்தல். | 7. மின்னணுக் கழிவுகள் இறக்குமதியினைக் குறைப்பதற்காக வருடத்தினுள் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் எண்ணிக்கை | ✓ | | |
| | | 8.நிராகரிக்கப்பட்ட இறக்குமதிப் செய்யப்பட்ட பயன்படுத்தப்பட்ட இலத்திரனியல் பொருட்களின் எண்ணிக்கை (கையடக்கத் தொலைபேசி,கணினிகள் போன்றவை) | | | ✓ |
| **16.** நிலையான அபிவிருத்திக்காக சமூகமான மற்றும் பூரணமான சமூகம் ஒன்றினை உருவாக்கல், நீதிக்காக அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கல் மற்றும் எல்லா மட்டங்களுக்கும் வினைதிறனான, பொறுப்புடன் கூடிய முழுமையான நிறுவனம் | 16.7 அனைத்து மட்டங்களிலும் பதிலளிக்கக் கூடியதும்,அனைவரையும் உள்ளடக்கி,பங்குபற்றலுடன் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தி தீர்மானங்கள் எடுக்கின்ற செயற்பாடுகளை உறுதிப்படுத்தல். | 9.நடாத்தப்பட்ட பணிக்குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை | | ✓ | |
| | | 10.நடாத்தப்பட்ட மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை | | ✓ | |
| | 16.10 தேசிய சட்ட முறைமை மற்றும் சர்வதேசக் பிரகடனங்கள், ஒப்பந்தங்களுக்கு இணக்கமாக பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் காணப்படுகின்ற | 11.தகவல்களை அறிந்துகொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பேரில் 14 நாட்களுக்குள் | | | ✓ |

| இலக்கு/நோக்கு | இலக்கு | அடைவு மட்டங்கள் | இது வரையில் அடையப்பட்ட அடைவு மட்டங்களின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-75% | 76%-100% |
| ஒன்றினைக் கட்டியெழுப்புதல் | உரிமையினை உறுதிப்படுத்தல் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்தல். | வழங்கப்பட்ட பதில்களின் எண்ணிக்கை | | | |
| | | 12. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் திணைக்கள இணையத்தளத்தில் அவ்வப்போது வெளியிடப்பட்ட அறிக்கைகள், தொகைமதிப்பு, வெளியீடுகளின் அளவு | ✓ | | |
| **17.** நிலையான அபிவிருத்திக்காக உலகளாவிய ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வலுப்படுத்தல் மற்றும் புத்துயிர்ப்படுத்தல் | 17.1. வரி மற்றும் ஏனைய வருமானங்களை சேர்த்தலை அதிகப்படுத்துவதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சர்வதேச உதவியை வழங்குதல் உள்ளிட்ட உள்நாட்டு வள முகாமை. | ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் முன்மொழிவு (UNSCR) 1540 ஐ இலங்கையில் நடைமுறைப்படுத்தல். | | ✓ | |
| | 17.16. விசேடமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளினதும் நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பல்வேறு தரப்பினரின் பங்களிப்புடன் அறிவு, அனுபவம், தொழில்நுட்பம் மற்றும் நிதி வள மற்றும் பகிர்ந்து கொள்ளலினூடாக நிலையான அபிவிருத்திக்காக உலகளாவிய பங்களிப்பை மேம்படுத்தல். | STRATLINK மின் கணனி முறைமையை நிறுவுதல் | | ✓ | |

## 5.2 நிலையான அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்வதில் வெற்றி மற்றும் சவால்கள்

கோவிட் 19 உலகளாவிய தொற்றுநோய் நிலையின் முடிவுடன் இலங்கைப் பொருளாதாரம் சந்தித்த அந்நிய செலாவணி இருப்பு நெருக்கடி நிலையில் அரச பொருளாதார கொள்கைகள், பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் சூழலில் மிகவும் கவனமாக செயற்படுத்தப்பட்டது. அரச செலவு முகாமைத்துவத்திற்காக பலவகைப்பட்ட செயற்பாட்டு இலக்குகளில் சேவைபெறுநர்கள் மற்றும் ஏனைய வசதிகள் வழங்குகின்ற நிறுவனங்களுடன் செயற்திறனாக சேவைபெறுநர் சாசனத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட முடிந்தது நாம் பெற்ற வெற்றியாகும்.

மேலும், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு திணைக்களமானது தனது பங்கை நிறைவேற்றுவதற்கு ஏனைய அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு செயற்பட்டு வருகின்றது. அங்கு, சில பணிகள் குறித்த அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படுவதுடன், அப் பணிகளை செய்யும் போதான முன்னேற்றமானது திணைக்களத்தின் இலக்கை அடைவதில் பெரும் தாக்கத்தை செலுத்துகின்றது. அவ் அரச நிறுவனங்கள், அவற்றின் பணிகளை செய்வதில் காட்டும் முன்னேற்றங்கள் எமது திணைக்களத்தின் கட்டுப்பாட்டை மீறிய விடயமென்பதுடன், அவை நாம் எதிர்கொள்ளும் மற்றுமோர் சவாலாகும். திணைக்களமானது அயராது உழைத்து இச் சவாலை வெற்றி கொண்டு நிலையான அபிவிருத்தியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது.

மேலும், திணைக்களத்தின் விடயப் பரப்பிற்கு புதிய நிலையான அபிவிருத்தி இலக்குகள் சில அறியப்பட்டுள்ளதுடன் அவ் இலக்குகளை அடைவதற்கான வழிகளை ஆய்வு செய்து வருகின்றது.

# 6 அத்தியாயம்

## 6.1 அத்தியாயம் - ஊழியர் முகாமைத்துவம்

வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்கு பொறுப்பாகவும் அர்ப்பணிப்புடனும் உள்ளனர். மேலும்,துறை சார்ந்த ஊழியர்கள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குமுறை, உரிமம்/பற்று மற்றும் வருவாய் சேகரிப்பு தொடர்பான கொள்கைகளை உருவாக்குவதில் தீவிரமாக பங்களிக்கின்றனர்.பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு.

| பதவி, சேவை மற்றும் தரம் | அனுமதிக்கப்பட்ட பணியாட்களின் எண்ணிக்கை | காணப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | பதவி வெற்றிடம்/ (மேலதிகம்) |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 14 | 11 | 03 |
| மூன்றாம் நிலை | 04 | 04 | 00 |
| இரண்டாம் நிலை | 84 | 75 | 09 |
| ஆரம்ப நிலை | 20 | 15 | 05 |
| **மொத்தம்** | 122 | 105 | 17 |

## 6.2 திணைக்களத்தின் செயலாற்றுகையினை முன்னிட்டு மனித வள பற்றாக்குறை அல்லது மேலதிகத்தின் பாதிப்பு

திணைக்களத்தில் காணப்படுகின்ற பணியாட்களின் வெற்றிடத்தைப் பூர்த்தி செய்வதற்கு பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மனித வளப் பற்றாக்குறையை நிரப்ப பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் பதவி (தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்பம்) புதிதாக உருவாக்கப்பட்டதோடு, அதற்காக ஆட்சேர்ப்பும் செய்யப்பட்டது.
- சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான ஏற்பாடுகளை கோரி தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.
- உதவி கட்டுப்பாட்டாளர் (தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம்) பதவி சம்பந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.
- வெற்றிடம் காணப்பட்ட நிர்வாக அலுவலர் பதவியை நிரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- வெற்றிடம் காணப்பட்ட மொழிபெயர்ப்பாளர் பதவியை நிரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- திணைக்களத்தில் வெற்றிடம் காணப்பட்ட சாரதி பதவிகள் 3 இல் ஒரு வெற்றிடம் சம்பந்தமாக பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் ஒருவர் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- திணைக்களத்தில் வெற்றிடமாக இருந்த அலுவலக ஊழியர் சேவையில் 03 பதவிகள் சம்பந்தமாக பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் 03 பேர் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, 2024.01.01 ஆம் திகதி முதல் தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வெற்றிட பதவிகளில் பெரும்பாலான சதவீதம் நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியுமானதாக இருந்ததுடன் மற்றும் மனித வள முகாமைத்துவம் காரணமாகவும், 2023 ஆம் ஆண்டில் திணைக்கள செயலாற்றுகை எதிர்பார்த்த மட்டத்திற்கு எட்டுவதற்கும் முடியுமாக இருந்தது.

## 6.3 மனித வள அபிவிருத்தி

2023 ஆம் ஆண்டில், திணைக்களத்தின் மனித வள மேம்பாட்டுடன் நேரடியாக தொடர்புடைய பின்வரும் திட்டங்கள்/பாடநெறிகளுக்கு ஊழியர்கள் அனுப்பப்பட்டனர்.

| நிகழ்ச்சி அல்லது பாடநெறியின் பெயர் | பயிற்சி வழங்கப்படுகின்ற பணியாட்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால எல்லை | மொத்த முதலீடு(ரூபா.000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு மற்றும் வெளிநாடு) | முடிவு/ பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| மொன்றியல் மாநாடு மற்றும் ஆளுகை பொறிமுறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அணுகுமுறைகள் மற்றும் நேர்மறையான | 81 | 2023.04.29 நாள் - 01 | - | - | உள்நாட்டு | ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றிய அறிவு, அணுகுமுறை மற்றும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சிந்தனையை மேம்படுத்தவும் பயிற்சித் திட்டம் | | | | | | நேர்மறையான சிந்தனையை மேம்படுத்துதல் |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சம்பந்தமான துறைமுக அதிகாரசபையின் பங்கு | 30 | 2023.04.18 2023.04.27 நாள் - 02 | - | - | உள்நாட்டு | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பாக துறைமுக அதிகாரசபையின் பங்கு பற்றிய அறிவு. |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் உரிமங்களை வழங்குவதில் நிகழ்நிலை செயல்முறை | 20 | 2023.05.15 தொடக்கம் 2023.07.19 வரை நாள் - 04 | - | - | உள்நாட்டு | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் உரிமங்களை வழங்குவதற்கான நிகழ்நிலை செயல்முறை பற்றிய அறிவு |
| இலங்கை சுங்கத்தால் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு சார்பான செயல்முறை பற்றிய பயிற்சி | 30 | 2023.16.19 2023.06.26 நாள் - 02 | - | - | உள்நாட்டு | இலங்கை சுங்கத்தின் மூலம் பொருட்களை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வது தொடர்பான செயல்முறை பற்றிய அறிவு |
| 2012 இல் வெளியிடப்பட்ட பணம் செலுத்தும் முறைகள் குறித்த அதி விசேட வர்த்தமானியில் உள்ள ஏற்பாடுகளைப் பற்றி கலந்துரையாடல். (கட்டம் II) | 25 | 2023.07.25 2023.08.09 நாள் - 02 | - | - | உள்நாட்டு | 2012 இல் வெளியிடப்பட்ட கட்டண முறைகள் குறித்த அதிவிசேட வர்த்தமானியின் விதிகள் பற்றிய அறிவு |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானிகள் வெளியிடும் செயல்முறை தொடர்பான கோட்பாட்டு பயிற்சி நிகழ்வு. | 23 | 2023.07.24 தொடக்கம் 2023.08.03 வரை நாள் - 05 | - | - | உள்நாட்டு | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானிகளை வெளியிடும் செயல்முறை தொடர்பான கோட்பாட்டு அறிவு |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் உரிமங்கள் / பற்றுகள் விநியோகித்தல் தொடர்பான செயற்பாடு.<br><br>பதிவு (Registration) செய்யப்பட்ட | 30 | நாள் - 10 | | | உள்நாட்டு | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் உரிமங்களை வழங்குதல்/ பற்று வழங்குதல் பதிவு (Registration) செய்யப்பட்ட |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உரிமங்களை விநியோகித்தல் (issuing license) பற்றுக்களை விநியோகித்தல் ( Issuing debit) | | | | | | உரிமங்களை விநியோகித்தல் (issuing license) பற்றுக்களை விநியோகித்தல் ( Issuing debit) தொடர்பான அறிவு |
| தீயணைப்புப் பற்றிய பயிற்சி நெறி. | 01 | நாள் - 01 | ரு.4125.00 | | உள்நாட்டு | திடீர் தீ விபத்தின் போது செயற்பட வேண்டிய முறை |
| அரசு பெறுகை செயல்முறை சம்பந்தமான சான்றிதழ் பயிற்சி நெறி | 01 | 2023.06.22 முதல் நாள் - 10 | ரு. 40000.00 | - | உள்நாட்டு | அரசு பெறுகை செயல்முறை பற்றிய அறிவு |
| அரச சேவையை டிஜிட்டல் மயமாக்குவது குறித்த திறன் ஆய்வு நிகழ்ச்சித் திட்டம் | 40 | 2023.07.31 நாள் - 01 | - | - | உள்நாட்டு | அரச சேவையை டிஜிட்டல் மயமாக்குவது குறித்த திறன் ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் அறிவு |
| STRATLINK கணினி மென்பொருள் அமைப்பு தொடர்பான பயிற்சி | 47 | 2023.09.18 முதல் 2023.09.20 வரை நாள் - 03 | ரு.155215.00 | - | உள்நாட்டு | STRATLINK கணினி மென்பொருள் அமைப்பின் செயற்பாடு தொடர்பான அறிவு |
| இரண்டாம் மொழிப் புலமை (150 மணிநேர தமிழ் மொழிப் பாடம்) | 16 | 2023.11.24 ஆம் தகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது | - | - | உள்நாட்டு | இரண்டாம் மொழிப் புலமையை நிறைவு செய்தல் |
| தகவல் தொழில்நுட்பக் குழுவிற்கு நடைபெறும் பயிற்சி. | 10 | 2023.11.09 முதல் 2023.12.07 வரை நாள் - 05 | ரு 374287.00 | - | உள்நாட்டு | தகவல் தொழில்நுட்பம், வன்பொருள், மென்பொருள் பற்றிய அறிவு |
| முகாமைத்துவ சேவை அலுவலர் தரம் 1 இற்கான தடைதாண்டல் பரீட்சைக்கான பாடநெறி | 07 | 2023.10.16 முதல் 2023.10.27 நாள் - 10 | - | - | உள்நாட்டு | முகாமைத்துவ சேவை அலுவலர் தரம் 1 ற்கான தடைதாண்டல் பரீட்சைக்கான அறிவை வளர்த்து, தேர்ச்சி பெறுவதற்கான தேவையை நிறைவு செய்தல். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சம்பள மாற்றம் குறித்த பயிற்சி நெறி | 02 | 2023.11.30<br>முதல்<br>நாள் -02 | ரு.19000.00 | - | உள்நாட்டு | சம்பள மாற்றம் பற்றிய அறிவு |
| பாலிகுளோரினேடற்றம் செய்யப்பட்ட பைபீனயில் (பிசிபி) திட்டத்திற்கான வழிகாட்டுதல் குழுக்களுக்கான ஒஸ்ரியாவில் நடைபெற்ற கூட்டம். | 01 | 2023.05.13<br>முதல்<br>2023.05.19 | - | அ.டொ.200<br>+<br>ரு. 28695.75 | வெளிநாடு | PCB வடிவமைப்பு மற்றும் அதன் பயன்பாடு பற்றிய அறிவு |
| உலகளாவிய வளர்ச்சி முன்முயற்சியின் கீழ் சீனாவில் டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் தொழில்துறை ஒருங்கிணைப்பு பற்றி நடைபெற்ற மாநாடு. | 01 | 2023.06.04<br>முதல்<br>2023.06.17 | - | அ.டொ.375<br>+<br>ரு. 26673.00 | வெளிநாடு | வளரும் நாடுகளுக்கு டிஜிட்டல் திறன்களைக் கொண்ட தொழில் வல்லுநர்களைப் பயிற்றுவிப்பதற்கும், தொழில்துறை வளர்ச்சிக்கு டிஜிட்டல் பொருளாதாரத்தைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் திறனை மேம்படுத்துவதற்கும்,சைபர் வெளி ஒன்றினைந்த சமூகத்தை உருவாக்குவதற்கும் உதவுவது தொடர்பான அறிவு. |
| பொருட்கள் மற்றும் சேவைகளில் சர்வதேச வர்த்தகம் குறித்து இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டம் | 01 | 2023.07.24<br>முதல்<br>2023.07.28 | - | அ.டொ.175 | வெளிநாடு | பொருட்கள் மற்றும் சேவைகளில் சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளில் சர்வதேச வர்த்தகம் தொடர்பான கருத்துகளுக்கான புள்ளிவிவரங்களுக்கான தரவு ஆதார நுட்பங்கள் பற்றிய நடைமுறை ஆலோசனை. இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை கட்டுப்படுத்துவத |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | ற்கான நடைமுறைகள் பற்றிய அறிவு |
| மலேசியாவில் நடைபெற்ற மூலோபாய வர்த்தக மாநாடு (MySTS) | 01 | 2023.10.23 முதல் 2023.10.27 | - | அ.டொ.240 | வெளிநாடு . | வர்த்தகம் மற்றும் விநியோக சங்கிலி பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு பற்றிய ஏற்றுமதி தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வைப் பெறல் |
| வளரும் நாடுகளில் (சீனா) சுங்க முகாமைத்துவம் குறித்த மாநாடு | 02 | 2023.10.26 முதல் 2023.11.08 | - | அ.டொ.750 + ரு. 30000.00 | வெளிநாடு | சீனாவில் நடைபெற்ற, வளரும் நாடுகளில் சுங்க முகாமைத்துவம் பற்றிய அறிவை பெற்றுக் கொள்ளல். |
| விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் குறித்து சிங்கப்பூரில் நடை பெற்ற பயிற்சி நெறி. | 01 | 2023.11.20 முதல் 2023.11.24 | - | - | வெளிநாடு | டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் தொழில்களை ஒருங்கிணைத்தல் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் அறிவைப் பகிர்தல் தகவல் நிபுணத்துவத்தைப் பெறுதல். |

## 7 அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை

| இலக்கம் | உரித்தாக்கிக் கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் | பொருந்துதல் நிலை (பொருந்தி உள்ளது/ தொடர்பற்றது) | தொடர்பற்றது எனின்,அது தொடர்பாக சிறு தெளிவுபடுத்தல் | தொடர்பற்றது எனின் எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கான முன்மொழியப்பட்ட சரியான தீர்வுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| 01 | **கீழ்க் காணப்படும் நிதிக் கூற்று/கணக்குகள் உரிய திகதிகளில் முன்வைக்கப்பட்டு உள்ளது.** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்று | பொருந்தி உள்ளது | | |
| 1.2 | அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கு | பொருந்தி உள்ளது | | |
| 1.3 | வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வர்த்தக முற்பணக் கணக்கு) | தொடர்பற்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | தொடர்பற்றது | | |
| 1.5 | விஷேட முற்பணக் கணக்கு | தொடர்பற்றது | | |
| 1.6 | ஏனைவை | - | | |
| 02 | **புத்தகங்கள் மற்றும் ஆவணப் பராமரித்தல் (445 நி.மு)** | | | |
| 2.1 | அரச நிர்வாகச் சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் ஆவணத்தினை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| 2.2 | தனிநபர் ஊதிய ஆவணங்கள் / தனிநபர் ஊதிய அட்டைகள் புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| 2.3 | கணக்காய்வு விசாரணை ஆவணத்தினைப் புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு விசாரணை ஆவணத்தை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குகளின் சாராம்சத்தை (CIGAS) ஒழுங்குபடுத்தி உரிய தினத்தில் திறைசேரிக்கு சமர்ப்பித்தல். | பொருந்தி உள்ளது | | |
| 2.6 | காசோலைகள் மற்றும் காசுக் கட்டளை ஆவணங்களை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| 2.7 | இருப்பு (inventory) ஆவணத்தினை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |

| இலக்கம் | உரித்தாக்கிக் கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் | பொருந்துதல் நிலை (பொருந்தி உள்ளது/ தொடர்பற்றது) | தொடர்பற்றது எனின்,அது தொடர்பாக சிறு தெளிவுபடுத்தல் | தொடர்பற்றது எனின் எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கான முன்மொழியப் பட்ட சரியான தீர்வுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| | | | | |
| 2.8 | மொத்த இருப்பு ஆவணத்தினை (Bulk inventory) புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| 2.9 | சேத பாதிப்பு பதிவு ஆவணத்தினை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| 2.10 | பொறுப்புக் கூறல் ஆவணம் புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| 2.11 | துணை துண்டுப்பிரசுரப் புத்தகப் ஆவணத்தை (GA-N20) புதுப்பித்தல் மற்றும் நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| **03** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான செயற்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தல்.(FR 135)** | | | |
| 3.1 | பிரதிநிதித்துவ நிதி அதிகார நிறுவனத்திற்குள் அதிகாரங்களைக் வழங்கல். | பொருந்தி உள்ளது | | |
| 3.2 | நிதி அதிகாரங்களைக் வழங்கல் தொடர்பாக நிறுவனத்திற்குள் விழிப்புணர்வுட்டல். | பொருந்தி உள்ளது | | |
| 3.3 | ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் இணங்குவதற்கான அதிகாரப் பிரதிநிதித்துவம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் தேதியிட்ட அரசு கணக்கு சுற்றறிக்கை எண். 171/2004 இன் படி அரசு ஊதியம் வழங்கும் மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துவதில் கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுதல். | பொருந்தி உள்ளது | | |
| **04** | **வருடாந்த திட்டமிடல்களை ஒழுங்குபடுத்தல்.** | | | |
| 4.1 | வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினைத் தயாரித்தல் | பொருந்தி உள்ளது | | |
| 4.2 | வருடாந்த விலைமனுக்கோரல் திட்டமிடல் அறிக்கையினைத் தயாரித்தல். | பொருந்தி உள்ளது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தினைத் தயாரித்தல் | பொருந்தி உள்ளது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்து தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு (NBD) உரிய தினத்திற்கு சமர்ப்பித்தல். | பொருந்தி உள்ளது | | |

| இலக்கம் | உரித்தாக்கிக் கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் | பொருந்துதல் நிலை (பொருந்தி உள்ளது/ தொடர்பற்றது) | தொடர்பற்றது எனின்,அது தொடர்பாக சிறு தெளிவுபடுத்தல் | தொடர்பற்றது எனின் எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கான முன்மொழியப் பட்ட சரியான தீர்வுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| | | | | |
| **4.5** | வருடாந்த நிதி ஓட்டப் பரிமாற்றம், உரிய தினத்தில் பொதுத் திரைசேரி செயற்பணித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | பொருந்தி உள்ளது | | |
| **05** | **கணக்காய்வு விசாரணை** | | | |
| **5.1** | அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்குமான பதில்கள், கணக்காய்வாளரால் விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு, வழங்கப்பட்டிருத்தல். | தொடர்பற்றது | பல்வேறு பிரிவுகளில் இருந்து பதில்கள் பெற்றுக் கொள்வதில் தாமதமாதல். | இனிவரும் காலங்களில் தாமதிக்காது பதில் அளிக்குமாறு அலுவலகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| 06 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| **6.1** | நி.பி.132(2) DMA/ 1-2019 இன் பிரகாரம்,வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளருடன் கலந்துரையாடியதன் பிற்பாடு உள்ளகக் கணக்காய்வுத் திட்டமிடலினைத் தயாரித்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **6.2** | ஆனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதிலளித்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **6.3** | 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கம் கொண்ட கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம்,அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **6.4** | நிதி பிரமாணம்134(3) இன் பிரகாரம்,அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளருக்கு சமர்ப்பித்தல். | பொருந்தி உள்ளது | | |
| **07** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| **7.1** | DMA சுற்றறிக்கை 1-2019 இன் படி தொடர்புடைய ஆண்டில் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களையாவது நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| **08** | **முகாமைத்துவ சொத்துக்கள்** | | | |
| **8.1** | 01/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 07ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் அப்புரப்படுத்தல் தொடர்பாக | பொருந்தி உள்ளது | | |

| இலக்கம் | உரித்தாக்கிக் கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் | பொருந்துதல் நிலை (பொருந்தி உள்ளது/ தொடர்பற்றது) | தொடர்பற்றது எனின்,அது தொடர்பாக சிறு தெளிவுபடுத்தல் | தொடர்பற்றது எனின் எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கான முன்மொழியப்பட்ட சரியான தீர்வுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| | தகவல்களை கொம்ட்ரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | | | |
| 8.2 | மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் 13 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் ,அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் ஒழுங்கமைப்புக்காக தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களை நியமித்து அவ் உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் கொம்ட்ரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| 8.3 | அரசாங்க நிதி சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் பிரகாரம்,இருப்புக் கணிப்பீட்டினை நடாத்தி உரிய அறிக்கையினை உரிய தினத்திற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் வருடாந்த பண்டக கணக்கெடுப்பில் (Annual Commodity Survey) வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகளை செய்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| 8.5 | பாவணைக்கு உதவாத பொருட்கள் அப்புறப்படுத்தல் தொடர்பில் நி.பி. 772 இன் பிரகாரம் மேற்கொள்ளல். | பொருந்தி உள்ளது | | |
| 09 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | ஒதுக்கப்படாத வாகனங்களுக்காக (pool vehicles) அன்றாட இயக்கக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கைகளைத் தயாரித்து உரிய தினத்திற்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன் வைக்கப்பட்டிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| 9.2 | பாவனைக்கு உதவாத வாகனங்களை 06 மாதங்களுக்குள் அப்புறப்படுத்தப்பட்டிருத்தல் | பொருந்தி உள்ளது | | |
| 9.3 | வாகனப் பதிவுப் புத்தகத்தினை பராமரித்துக் கொண்டு அவற்றை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்துக்கள் தொடர்பாகவும் நி.பி.103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் அலுவல்களை மேற்கொள்ளல். | பொருந்தி உள்ளது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம்,வாகனங்களின் எரிபொருள் வாயுப் பரிசோதனையினை மீள் பரிசோதனை செய்தல். | பொருந்தி உள்ளது | | |
| 9.6 | காலவதியான கால வரையறைகளின் பிற்பாடு, வாடகை வாகன லொக் புத்தகங்களின் பூரண உரிமையினை கையகப்படுத்தியிருத்தல். | பொருந்தி உள்ளது | | |

| இலக்கம் | உரித்தாக்கிக் கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் | பொருந்துதல் நிலை (பொருந்தி உள்ளது/ தொடர்பற்றது) | தொடர்பற்றது எனின்,அது தொடர்பாக சிறு தெளிவுபடுத்தல் | தொடர்பற்றது எனின் எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கான முன்மொழியப் பட்ட சரியான தீர்வுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| 10 | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | | |
| **10.1** | உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து உறுதிப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **10.2** | மீளாய்வு ஆண்டு அல்லது அதற்கு முற்பட்ட ஆண்டுகள் தொடக்கம் முற்கொண்டு செல்லப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகளைத் தீர்த்திருத்தல் | பொருந்தி உள்ளது | | |
| **10.3** | வங்கி இணக்கக் கூற்றுக்களின் மூலம் இனங்காணப்பட்ட மற்றும் சீர்செய்யப்பட வேண்டியிருந்த மீதி தொடர்பாக நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயற்பட்டு அம்மீதிகள் ஒரு மாத காலத்திற்குள் தீர்த்து வைக்கப்பட்டிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| 11 | **ஒதுக்கீடுகளின் பயன்பாடு** | | | |
| **11.1** | வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் வரம்புகளை மீறாமல் செலவு செய்தல் | பொருந்தி உள்ளது | | |
| **11.2** | நி.பி.94(1)இன் படி, வழங்கப்பட்ட ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பிறகு, ஒதுக்கீட்டு வரம்பை மீறாமல், ஆண்டின் இறுதியில் பொறுப்புக் கூறல். | பொருந்தி உள்ளது | | |
| **12** | **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| **12.1** | வரையறைகளுக்கு இணங்கி இருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **12.2** | கடன் நிலுவைத் தொகை தொடர்பான காலப் பகுப்பாய்வு ஒன்றினை செய்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **12.3** | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் பாக்கியை செலுத்தியிருத்தல். | பொருந்தி உள்ளது | சேவை இடைநிறுத் தப்பட்ட அதிகாரிக ளின் கடன் நிலுவை காணப்படல். | எஞ்சியுள்ள கடன் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| **13.1** | காலங் கடந்த வைப்புக்கள் தொடர்பில் நி.பி.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |

| இலக்கம் | உரித்தாக்கிக் கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் | பொருந்துதல் நிலை (பொருந்தி உள்ளது/ தொடர்பற்றது) | தொடர்பற்றது எனின்,அது தொடர்பாக சிறு தெளிவுபடுத்தல் | தொடர்பற்றது எனின் எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கான முன்மொழியப்பட்ட சரியான தீர்வுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| **13.2** | பொது வைப்புத் தொகைக்கான கட்டுப்பாட்டுக் கணக்கைப் புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| **14.1** | பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **14.2** | நி.பி.371 இன் பிரகாரம் வெளியிட்ட நிகழ்நேர் இடைக்கால கட்டுநிதி, பணி முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்த்து வைத்திருத்தல். | தொடர்பற்றது | | .இனி வரும் காலங்களில் இது போன்ற செயல்கள் நடைபெறாமல் இருக்க அலுவலகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| **14.3** | நி.பி.371 இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட வரையறைகளுக்கு மேற்படாமல் நிகழ்நேர் இடைக்கால கட்டுநிதியினை வழங்கப்பட்டிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **14.4** | கட்டுநிதிக் கணக்கின் மீதி, திறைசேரிப் புத்தகங்களுடன் மாதாந்தம் ஒப்பிடுதல். | பொருந்தி உள்ளது | | |
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| **15.1** | உரிய ஒழுங்கு விதிகளின் பிரகாரம், ஈட்டப்பட்ட வருமானத்தினால் மீள்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **15.2** | ஈட்டப்பட்டிருந்த வருமானத்தினால்,வைப்புக் கணக்கிற்கு வைப்புச் செய்யாமல் நேரடியாக வருமானக் கணக்கிற்கு வரவு வைத்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **15.3** | நி.பி.176 இன் படி நிலுவைத் தொகை அறிக்கைகளை கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| **16.1** | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் வரம்பிற்குள் பணியாளர்களை நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |

| இலக்கம் | உரித்தாக்கிக் கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் | பொருந்துதல் நிலை (பொருந்தி உள்ளது/ தொடர்பற்றது) | தொடர்பற்றது எனின்,அது தொடர்பாக சிறு தெளிவுபடுத்தல் | தொடர்பற்றது எனின் எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கான முன்மொழியப் பட்ட சரியான தீர்வுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| | | | | |
| **16.2** | திணைக்களத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்துப்பூர்வமான கடமை பட்டியலை வழங்கியிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **16.3** | 2017.09.20 ஆம் திகதி கொண்ட MSD சுற்றறிக்கை 04/2017 இலக்கத்தின் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **17** | **பொதுமக்களுக்கு தகவல்களை பெற்றுக் கொடுத்தல்** | | | |
| **17.1** | தகவல்களை அறிந்து கெள்வதற்கான சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தகவல்களை வழங்குவதற்கான ஆவணம் ஒன்றினை புதுப்பித்து நடாத்திச் செல்லல். | பொருந்தி உள்ளது | | |
| **17.2** | நிறுவனம் தொடர்பான தகவல்களை இணையத்தளத்தினூடாக வழங்கியிருப்பதோடு, இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழியினூடாக நிறுவனம் தொடர்பாக பொதுமக்களது பாராட்டுக்கள் /முறைப்பாடுகளைச் வெளியிடுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **17.3** | தகவல் பெற்றுக் கொள்வதற்கான சட்டத்தின் 08 ஆவது மற்றும் 10 ஆவது பிரிவுகளின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு இரு தடவைகள் அல்லது வருடத்திற்கு ஒரு தடவை அறிக்கையினை சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **18** | **பொதுமக்கள் பிரகடனத்தினை நடைமுறைப்படுத்தல்.** | | | |
| **18.1** | 05/2008 இலக்கம் கொண்ட மற்றும் 05/2018(1) இலக்கம் கொண்ட அரச பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகளின் பிரகாரம் பொதுமக்கள்/நுகர்வோர் பிரகடத்தினைத் தொகுத்து நடைமுறைப்படுத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **18.2** | இச்சுற்றறிக்கையின் 2.3 ஆவது அத்தியாயத்தின் படி பொது மக்கள் / நுகர்வோர் பிரகடத்தினைத் தொகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட விடயங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டுக்காக நிறுவனத்தினால் வழிமுறைகளைத் தயாரித்து வைத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **19** | **மனித வள அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல்.** | | | |
| **19.1** | 2018.01.24ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இணைப்பு 02 மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மனித வள அபிவிருத்தித் திட்டமொன்றை அமைத்திருத்தல் | பொருந்தி உள்ளது | | |
| **19.2** | பணிக் குழுவின் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்காகவும் ஒரு வருடத்திற்குக் குறைந்த பட்சமாக 12 மணித்தியாலயங்களுக்குக் குறையாத பயிற்சிக்கான | பொருந்தி உள்ளது | | |

| இலக்கம் | உரித்தாக்கிக் கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் | பொருந்துதல் நிலை (பொருந்தி உள்ளது/ தொடர்பற்றது) | தொடர்பற்றது எனின்,அது தொடர்பாக சிறு தெளிவுபடுத்தல் | தொடர்பற்றது எனின் எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கான முன்மொழியப் பட்ட சரியான தீர்வுச் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பமொன்று மேலே குறிப்பிடப்பட்ட மனித வள திட்டத்திற்குள் உறுதிப்படுத்தி இருத்தல். | | | |
| **19.3** | மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றிக்கையின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு அனைத்து பணிக் குழுவினர்களுக்காகவும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களை கையொப்பமிட்டிருத்தல். | பொருந்தி உள்ளது | | |
| **19.4** | மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள திட்டத்தை ஒழுங்குபடுத்தல், திறன்களை மேம்படுத்தல், திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதைப் பொறுப்பளித்து சிரேஷ்ட அலுவலரொருவரை நியமித்திருத்தல் | பொருந்தி உள்ளது | | |
| **20** | **கணக்காய்வுப் பந்திகளுக்குப் மறுமொழிகளை அளித்தல்.** | | | |
| **20.1** | கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கடந்த வருடத்திற்கான கணக்காய்வுப் பந்திகள் மூலம் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளைத் திருத்தி அமைத்தல். | பொருந்தி உள்ளது | | |

## முடிவுரை

இந்நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், பொது சுகாதாரம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற விடயங்களில் நிலைத்தன்மையை உண்டாக்குவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல்களினால் இத் திணைக்களம் பெரும் பங்காற்றி வருகின்றது.

கடந்த வருடங்களில் சந்தித்த உலகளாவிய தொற்றுநோய் நிலையுடன் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பெரும் தாக்கத்தினால் நாட்டில் ஏற்பட்ட பெரும் நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழிகளை காண்பதற்கு திணைக்களத்தின் பணிகளினூடாக பணிக்குழுவிற்கு முடிந்தது. அதற்கமைய, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு இச் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு தற்போதைய பொருளாதார முகாமைத்துவத்திற்காக கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை விதித்து இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டது. சர்வதேச கொடுப்பனவு முறைகள் சம்பந்தமாக தொடர்ந்து கவனம் செலுத்தி முன்னர் இருந்த கொடுப்பனவு முறைகளுக்குரிய கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்த, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட பொருட்களுக்கான ஒழுங்குவிதிகளை படிப்படியாக தளர்த்தி 2023 ஆம் ஆண்டில திணைக்களத்தினால் பெரும் பணியாற்றப்பட்டது.

சரியான நோக்குடன் சரியான செயற்பணியின் அடிப்படையில் அரச பொறிமுறைக்கு உதவி மக்களுக்கு வழங்கிய சேவைகளுக்கு திணைக்களத்தின் பணிக்குழுவினர்கள் பரஸ்பர ஒத்துழைப்புடன் கடமையாற்றுகின்றனர்.

திணைக்களத்தின் பணிக்குழுவினர் தமது கடமைகளை உற்சாகத்துடன் செய்வதற்காக அவர்களது அறிவு மற்றும் திறன்களை மேலும் விருத்தி செய்வதற்காக பல்வேறு நிகழ்ச்சிகள், நலன்புரி சங்கத்தின் நேரடிப் பங்களிப்புடனும் வழிகாட்டுதல்களுடனும் மேற்படி வருடத்தில் செயற்பட்டது.

உரிமங்களை வழங்கும் புதிய நிகழ்நிலை முறை 2024 ஆம் ஆண்டில் பூரணமாக ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதுடன், அதன் மூலம் இத்திணைக்களத்தின் பணிகளை மிகவும் சரியாகவும், செயற்திறனாகவும் மக்கள் சார்பாகவும் நடத்த முடியும்.